1990 ஆகஸ்ட் 21]

திருமதி பாப்பா உமாநாத் : நிச்சயமாக அமைச்சர் அவர்கள் கூறியபடி நான் பாராட்டுவதற்குத் தயார். ஆனால் அவர்கள் கூறியபடி நடவடிக்கை எடுத்த பிறகு என்னுடைய பாராட்டுதலை தெரிவிக்கத் தயார். அதுவும் கேள்வி நேரத்திலே பாராட்டக் கூடாது என்று நம்முடைய தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். தனியாக அந்த ஏற்பாட்டை வைத்துக் கொள்ளலாம். 1984—லிருந்து பல விவகாரங்கள் நடந்திருக்கின்றன. துரதிருஷ்டவசமாக அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. இப்போது தேர்வு செய்யப்பட்டிருப்பதால் தற்போதுதான் பார்க்கிறேன். அமைச்சர் சொல்வது போல் அல்ல. துவக்க காலத்திலேயே இந்தச் சபையிலே நான் அந்தக் கேள்வியை எழுப்பி அதைச் சொல்லியிருக்கிறேன். எனவே காலதாமதம் இல்லாமல் அமைச்சர் செய்தால் நிச்சயமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அம்மையாருக்குத் தெரிவித்து கொள்கிறேன். அதிர்ஷ்டவசமாக அப்போது நான் அமைச்சராக இல்லை. போகட்டும். அம்மையார் இந்தக் கேள்வியை கேட்டதற்கு முன்னாலேயே இந்த அரசு 31—8—1990—க்குள் மீதி இருக்கின்ற அத்தனை பேர்களுடைய பணிப் புத்தகங்களை அனுப்ப வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, கடந்த 2, 3 ஆண்டுக் காலமாக பொதுப்பணித் துறையில் பி.இ. படித்த எலெக்ட்ரானிக் என்ஜினியர்ஸ் 37 பேர்கள் தற்காலிகமாக வேலை செய்தார்கள். அவர்களுக்கு ஏ.இ.க்கு உள்ள முழுச் சம்பளம் தரப்படுகிறது. அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எதுவும் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறதா? அதை அரசாங்கம் பரிசீலித்து விரைந்து நிரந்தரமாக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இது என்.எம்.ஆர். பொறுத்த கேள்வி. அந்தப் பணியாளர்கள் மீது இவ்வளவு அக்கறை செலுத்தும் திரு. சீனிவாசன் ஒரு தனிக் கேள்வி போடலாம்.

சனத்குமார் நதியில் அணைக் கட்டுதல்.

* 8128 திரு. டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

[1990 ஆகஸ்ட் 21

(அ) தருமபுரி மாவட்டம், தண்டரை கிராமத்தை ஒட்டிச் செல்லும் சனத்குமார் நதியில் அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. டி. சி. விஜயேந்திரையா : பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதியில் தண்டரை கிராமத்தை ஒட்டிச் செல்லும் சனத்குமார் நதியில் அணை கட்டுவதற்கு ஏற்கனவே இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் பணத்தை ஒதுக்கி ஆய்வுகள் நடத்தப்பட்டு வேலை நின்றிருக்கிறது. தளி தொகுதியில் இந்த அணையை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் தண்ணீருக்கு மிகவும் பஞ்சமாக இருப்பதால், விவசாயக் குடிமக்களுக்கு தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படாமல் இருப்பதற்கு இந்த அணையைக் கட்ட வேண்டும். இது மேட்டுப்பாங்கான பிரதேசமாக இருப்பதால் அங்கு தண்ணீர் தேங்குவதும் இல்லை. கிணறுகளில் தண்ணீர் தங்குவதற்கு வழியில்லை. எனவே இந்த அணையைக் கட்டி கிணறுகளில் தண்ணீர் ஊற்றை ஏற்படுத்தி விவசாயத்திற்கு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மானியக் கோரிக்கை அல்ல. வினாவாகக் கேளுங்கள்.

திரு. டி. சி. விஜயேந்திரையா : தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கி, தண்ணீர் வசதியை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையைக் கட்டுவது பெரிது அல்ல, செலவு செய்வதும் பெரிது அல்ல. அதனால் மக்களுக்கு ஏதேனும் பயன உண்டா என்றும் அரசு பார்க்கவேண்டும். இந்த அணையைக் கட்ட, கிட்டத்தட்ட இன்றையதின மதிப்பீட்டின்படி 10, 15 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். 300 ஏக்கர் நிலத்திற்கு மேல் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் அவர்கள் சொன்னது போல் மழை இல்லை, தண்ணீர் தேங்குவதும் இல்லை. இன்றைக்கு அதனுடைய பயன் விகிதாசாரம் மிக மிகக் குறைவாக, அதாவது 0.251 என்ற விகிதத்தில் அமைந்து இருக்கிறது. ஆய்வு அறிக்கையும் அந்த நிலைமையில் இருக்கிறது. நிலத்தடி நீரை மேலே கொண்டு வருவதற்கு

TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்ட் 21]

பலயிடங்களில் புல திட்டங்களை வேளாண்மைத் துறை, கிரவுண்டு வாட்டர் துறை போன்றவை மூலமாக இதை அணுகலாம் என்பது என்னுடைய கருத்து.

திரு. டி.சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வைச் செய்யும்போது பி.சி. ரேஷியோவை உபயோகம் செய்கிறார்கள். தளித் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். அந்த இடத்தில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—ஒசூர், தென்கனிகோட்டை போன்ற இடங்களில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—அதற்கு எக்சம்சன் கொடுத்து உதவி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை தருவது அணைக்கட்டுவதில் இருக்காது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரின் ஆர்வத்தை கணக்கில் கொண்டு நான் ஒரு முறை உங்கள் பகுதிக்கு வந்து பார்வையிட்டு முடிவு எடுக்கலாம்.

பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம்.

** 9418* திரு. கே. சுந்தர் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

சித்த மருத்துவக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் ஏற்படுத்துதல்.

**5204* திரு. செங்கைசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;